DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:S.C.No.119/2025

Prosecution Witness P.W.3

| | |
|---|---|
| Name : **திரு.தேவதாஸ்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்

**நாள்: 27.01.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் பழனிசெட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 06.11.2024ம் தேதியன்று மாலை சுமார் 05.00 மணியளவில் பி.சி.பட்டி பஸ்ஸ்டாண்ட் ஆட்டோ ஸ்டாண்ட்-ல் நான், சாட்சி பாண்டியராஜன், இந்திரஜித், பாலமுருகன் ஆகியோர் நின்று பேசிக் கொண்டிருந்தோம். அப்போது போஜராஜ் எனது தாத்தா எனக்கு போன் செய்தார். அவர் போன் செய்தவுடன் அணை கருப்பசாமி கோவில் அருகில் தாமோதரன் அடிபட்டு கீழே படுத்திருப்பதாகவும், ஜெகநாதன் செட்டியார் என்பவர் இந்த தகவலை தனக்கு தெரிவித்ததாக எங்களிடம் சொல்லி எங்களை அங்கு வரச் சொன்னார்.

2. நாங்கள் அங்கு சென்று போய் பார்த்தோம். எனது சித்தப்பா தாமோதரனை நாங்கள் அங்கு சென்று போய் பார்த்தபோது அவருக்கு இரண்டு கைகள், இரண்டு மணிக்கட்டு தோள்பட்டையிலும், முதுகு ஆகிய இடங்களில் கன்றிய காயங்கள் கருப்பு நிறத்தில் இருந்தது, மூக்கில் அவருக்கு ரத்தம் வந்திருந்தது. பி.சி. பட்டி ஆட்டோ ஸ்டாண்ட்-ல் இருந்து ஆட்டோக்காரர்

பெரியசாமி என்பவரை நாங்கள் போன் செய்து வரச் சொல்லி பாண்டியன், நான் இருவரும் சேர்ந்து எனது சித்தப்பா தாமோதரனை தூக்கி ஆற்றைத் தாண்டி சென்று ஆட்டோவில் ஏற்றி வித்யா மருத்துவமனைக்கு சென்றோம். PC பட்டியில் இருந்து ஒரு வண்ணான்துறை உள்ளது. அந்த வண்ணான் துறையில் வண்டியை நிறுத்திவிட்டு மரப்பாலத்தில் சுமார் 20 அடி தூரம் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். அவ்வாறு கடந்து சென்ற பிறகு முல்லைப் பெரியாற்று தென் கரையில் கோயில் அங்கிருந்து சுமார் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும் தாமோதரன் பிரேதம் இருந்த இடம் ஒரு அணையானது கட்டப்பட்டுள்ளது. அந்த அணையை ஒட்டி அமைந்துள்ள ஆலமரத்திற்கு பக்கத்தில் அவரது பிரேதம் இருந்தது. அது ஒரு சபைக்கு சொந்தமான இடமாகும். எனது சித்தப்பாவின் உடம்பை நாங்கள் ஆற்று பாலம் வழியாக தூக்கி வந்து ஆட்டோவில் ஏற்றி வித்யா மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம், அவர்கள் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினார்கள்.

3. 108 ஆம்புலன்ஸ்–க்கு நாங்கள் தகவல் சொல்லி வரச் சொல்லி அங்கிருந்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். அங்கு மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். அப்போது இரவு சுமார் 8.00 – 8.15 மணி இருக்கும். அப்போது எனது சித்தப்பாவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்ததால் மதுரை எடுத்துச் செல்லும் அளவிற்கு அவர் உடல் தாங்காது என்பதால் நாங்கள் வீட்டிற்கு எடுத்து வந்து விட்டோம். மறுநாள் காலை 3.00 மணி அளவில் எனது சித்தப்பா இறந்துவிட்டார். மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று புகார் தெரிவித்தோம். ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது சித்தப்பாவின் உடலை பிரேத விசாரணைக்கு எடுத்துச் சென்றார்கள்.

4. அதன் பிறகு சுமார் ஒரு மாதங்கள் கழித்து 04.12.2024 ஆம் தேதியன்று போலீசார் எங்களை மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைத்து சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் கிடைத்ததாக தகவல் சொன்னார்கள். சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் பெயரை போலீசார் சொன்னார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. போலீசார் என்னை விசாரணை செய்யும்போது நான் ஆட்டோ டிரைவர் என்ற விவரத்தைச் சொல்லியுள்ளேன். போஜராஜன் தாத்தாவும் என் மாமா பெரியசாமி தான் சம்பவ இடத்திற்கு முதலில் சென்றார்கள், அவர்கள் பின்னால் தான் நாங்கள் சென்றோம். எங்களுக்கு தகவல் சொன்ன ஜெகநாதன் செட்டியார் அங்கு இருந்தார், அவரை நான் அங்கு பார்த்தேன். அவர் தகவல் சொல்லி கால் மணி நேரத்தில் நாங்கள் அங்கு சென்றிருப்போம் நாங்கள் சம்பவயிடத்திற்கு போகும்போது மணி என்ன இருக்கும் என்றால் மாலை 5.15 – 5:30 மணி இருக்கும். சம்பவ இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால் பிசி பட்டி காவல் நிலையத்தை தாண்டித்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

2. ரோட்டு மேல் தான் காவல் நிலையம் அமைந்துள்ளது. காவல் நிலையத்தை தாண்டித்தான் நாங்கள் செல்ல வேண்டும். சம்பயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் ஒரு பர்லாங்கு தூரம் இருக்குமா என்றால் ஒரு பர்லாங்கு தூரம் இருக்கும். சலவைத் துறை அப்புறம் தடுப்பணை குளிக்க கூடிய இடம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான், துவைக்கும் இடமும் அங்கு தான் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் பக்கத்தில் வீடுகளும் உள்ளது என்றால் சரியல்ல, வீடுகள் கிடையாது, கட்டடங்கள் கிடையாது. கோயிலுக்கும், சலவைத் துறைக்கும் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். அந்த கோயில் பிரசித்தி பெற்ற கோயில் என்றால் சரிதான் எப்பொழுதும் காலையிலிருந்து மாலை 4 மணி வரை ஆட்கள் சாமி கும்பிட வருவார்கள் என்றால் சரியல்ல.

3. திருவிழா காலங்களில் மட்டுமே அந்த கோயிலுக்கு ஆட்கள் வருவார்கள். மற்ற நேரங்களில் வரமாட்டார்கள். வண்ணான் துறைக்கு காலையிலிருந்து மாலை 4 மணி வரை குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் ஆட்கள் வருவதுண்டு. அன்றைய தினம் கிடா வெட்டி விசேஷம் நடந்தது என்றால் ஒரே ஒரு நிகழ்ச்சி மட்டும் நடந்துள்ளது. அது ஒரு சிறு நிகழ்ச்சி மட்டும் சேவல் அறுக்கும் நிகழ்ச்சி நடந்து மதியம் ஒரு மணிக்கு எல்லாம் அங்கிருந்து அவர்கள் கிளம்பி விட்டார்கள் அன்றைய தினம் கிடா வெட்டு நிகழ்ச்சி நடந்தது என்றால் சரியல்ல, சேவல் மட்டும் தான் வெட்டினார்கள்.

4. நாங்கள் போய் பார்க்கும்போது காயம் பட்ட தாமோதரன் உட்கார்ந்திருந்தாரா என்றால் அவர் குப்புறபடுத்து கைகளை நீட்டிக்கொண்டு படுத்திருந்தார் அவர் குப்புற படுத்து இருந்ததால் முகத்தை பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நாங்கள் முகத்தை திருப்பி பார்த்தோம். குப்புற படுத்து இருந்த இடத்திற்கும் வண்டிகள் நடைபாதை இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் சுமார் 350 மீட்டர் தூரம் இருக்கும் அங்கிருந்து பார்த்தால் குப்புற படுத்திருக்குமிடம் தெரியாது என்றால் சரிதான்.எங்களுக்கு முன்பாகவே ஜெகநாத செட்டியார் பிரேதத்தின் தலையை பார்த்துவிட்டார். நாங்கள் போய் பார்க்கும்போது இரண்டு கைகளையும் மேலே நீட்டி எனது சித்தப்பா ஒரு தலை ஒருக்களித்து படுத்திருந்ததை பார்த்தோம். நாங்கள் பிரேதத்தின் உடலை முழுமையாக திருப்பிப் பார்த்து அவர் உடலில் இருந்த காயங்களை தெரிந்து கொண்டோம்.

5. மூக்கில் மட்டும் ரத்த காயங்கள் மற்றவை கன்றிய காயங்கள். சம்பவயிடத்தில் தரைப்பகுதியில் ரத்தம் படவில்லை, அவர் உடுத்திருந்த துணிகளிலும் ரத்தக்கறைகள் இல்லை. நான் போய் பார்க்கும்போது எனது சித்தப்பா பேண்ட் மற்றும் சட்டை அணிந்து இருந்தார். என்ன நிறத்தில் உடை அணிந்து இருந்தார் என்று நான் கவனிக்கவில்லை. எங்களைத் தவிர அந்த பகுதியில் அந்த சமயத்தில் நடை பயிற்சிக்கு சென்றவர்கள் யாரும் அங்கு

இல்லை. நாங்கள் எனது சித்தப்பாவை அழைத்து வரும்பொழுது அல்லது அவரை ஏற்றுக் கொண்டு செல்லும்போது காவல் நிலையத்திற்கு சென்று இது பற்றி தகவல் தெரிவித்தோமா என்றால் தெரிவிக்கவில்லை. மருத்துவமனைக்கு செல்லும்போது நான் பாலமுருகன், இந்திரஜித், பாண்டியராஜன் மற்றும் எனது தாத்தா ஆகியோர்கள் சென்றோம்.

6. வித்யா மருத்துவமனையில் எனது சித்தப்பாவை உள்நோயாளியாக சேர்த்தோமா என்றால் அது தனியார் மருத்துவமனை காண்பித்தவுடன் அவர்கள் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல சொல்லி விட்டார்கள். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் யார் என்று நான் பெயர் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் மருத்துவர் என்று தெரியும் பெயர் தெரிந்து கொள்ளவில்லை. நான் கூறுவது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், இறந்து போனவர் இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் எனது சித்தப்பாவுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>3–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

7. போலீசார் என்னை விசாரிக்கும்போது எனது சித்தப்பா அடிபட்டு கிடப்பதாக தகவல் சொன்னார்கள் என்று தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது போஜராஜன் எனது தாத்தா என்ற விவரத்தையும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் போஜராஜன் எனது சித்தப்பா என நான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல தாமோதரன் தான் எனது சித்தப்பா என சொல்லியுள்ளேன். தாமோதரன் எனது சித்தப்பா என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தை எந்த போலீசார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எனது சித்தப்பா அணிந்திருந்த உடைகளை கழட்டி பார்க்கும்போது தான் அவர் உடம்பில் ஏற்பட்டுள்ள காயங்கள் தெரிந்ததென்றால்

சரிதான். சட்டை இல்லாமல் எனது சித்தப்பாவை நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோமா என்றால் சட்டை பட்டன்களை மட்டும் கழட்டி உடம்பை சோதனை செய்து பார்த்தோம். போலீசார் என்னை விசாரணை செய்யும்போது சட்டையை கழட்டி பார்த்தோம் என்ற விபரத்தை சொல்லி உள்ளேன். எனது சித்தப்பாவுக்கு மூக்கில் ரத்தம் வந்த விபரத்தையும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.நான் காயம் பட்ட நபர் எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றும், நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும் எனக்கு வழக்கு பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**<u>4-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

8. நான் எட்டாம் வகுப்பு வரை படித்து இருக்கிறேன். நான் கார் டிரைவர், நான் ஆட்டோ ஓட்டுவது கிடையாது. ஆய்வாளர் என்னை விசாரணை டிரைவிங் லைசன்ஸ் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அது பற்றி போலீசார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. நான் கார் ஓட்டுவது தவிர வீடு புரோக்கரேஜ் தொழிலும் செய்து வருகிறேன். 12 வருடங்களாக கார் ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். பொதுவாக ஒரு சம்பவம் நடந்தவுடன் தனியார் ஆம்புலன்ஸில் எடுத்துச் செல்வார்களா அல்லது 108 ஆம்புலன்ஸில் எடுத்துச் செல்வார்களென்றால் 108 ஆம்புலன்ஸ்-ல் தான் அழைத்துச் செல்வார்கள். 108 ஆம்புலன்ஸ்-க்கு தகவல் சொல்லாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் சாதாரண காயமாகத்தான் இருக்கும், பக்கத்திலிருந்த மருத்துவமனை பார்க்கலாம் என்ற எண்ணத்தில் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லவில்லை.

9. சம்பவயிடத்தில் பாதிக்கப்பட்ட நபர் அங்கு இல்லவே இல்லை என்றும் அவ்வாறு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸை அழைத்தால் எந்த இடத்தில் வந்து காயம் பட்ட நபரை அழைத்து சென்றார்கள் என்ற விபரம் தெரியவரும் என்பதால்தான் 108 ஆம்புலன்ஸை நாங்கள் அழைக்காமல் இருந்துள்ளோம் என்றால் சரியல்ல. என் சித்தப்பா மனநலம்

பாதிக்கப்பட்டவர் என்று போலீஸிடம் நான் சொல்லி உள்ளேனா என்றால் அவர் அவ்வளவு ஆக மனநலம் பாதிக்கப்பட்டவர் கிடையாது. நாம் ஒன்று சொன்னால் அவர் வேறு ஒன்று செய்வார். ஒரு விஷயம் சொன்னால் அதற்கு எதிர்வினையாக ஒன்று செய்வார் என்றால் சரிதான்.எனது சித்தப்பா அடித்தால் திருப்பி அடிக்க மாட்டார். நான் சொல்வது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனது சித்தப்பாவிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.27 19:36:03 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.